**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 66/2024**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : ஜான் ராஜேஷ் | **Caste** | : | |
| **Father's Name** | : டேவிட் | **Calling** | : | தனியார் நிறுவனத்தி வேலை |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | 33 |
| | | **Dated** | : | **02.09.2025** |

**02.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு.**ஜான் ராஜேஷ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கலில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த ஸ்டெல்லா எனது அம்மா. காயம்பட்ட டேவிட் எனது அப்பா. கடந்த 29.07.2023ம் தேதி எனது அம்மாவும், அப்பாவும் எனது மனைவியின் வளைகாப்பு விசேசத்தை எனது

தங்கை ஷாம்லி என்பவரிடம் சொல்வதற்காக மதுரைக்கு சென்றிருந்தார்கள். மறுநாள் காலை 06.45 மணிக்கு எனது அம்மாவும் அப்பாவும் TN-57-BC-4942 TVS ZEST இருசக்கர வாகனத்தில் எனது தங்கை வீட்டிலிருந்து கிளம்பினார்கள். வரும்வழியில் திண்டுக்கல் பார்வதி கல்லூரி அருகே அவர்கள் வந்து கொண்டிருந்தபோது அவர்களுக்கு பின்னால் மதுரையிலிருந்து திண்டுக்கல் நோக்கி வந்த ஒரு கார் மோதியதாக தகவல் கேள்விப்பட்டு நானும் , ஆனந்த் என்பவரும் சம்பவ இடம் சென்று பார்த்தோம். அப்போது எனது அம்மாவிற்கு பின் தலை, கை, கால்களிலும் காயம் பட்டிருந்து. எனது அப்பாவிற்கு கை, கால்களில் காயம் பட்டிருந்தது.எனது அப்பாவிற்கு ெஹல்மெட் போட்டிருந்தும் தலையில் அடிபட்டிருந்தது. பின் காயம்பட்ட எனது அம்மா, அப்பாவையும் பித்தளை பட்டி பிரிவில் இருந்த தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக JCB மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது அம்மாவிற்கு பலத்த காயம் பட்டிருந்ததால் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல jcb மருத்துமனையில் சொன்னார். நான் எனதுஅம்மாவை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்காக சேர்த்தேன். எனதுஅப்பாவை ஒரு நாள் மட்டும் JCB மருத்துவமனையில் சிகிச்சைக்காக வைத்தேன். இதுசம்மந்தமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் போலிசார் வந்து விசாரிக்க நடந்ததை கூறி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் எனது அம்மாவை பரிசோதித்த மருத்துவர்கள் அவரை மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அழைத்து செல்ல சொன்னதன்பேரில் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மதுரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மறுநாள் எனது அப்பாவையும் Jcb மருத்துவமனையிலிருந்து மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். எனது அம்மா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். இந்த சம்பவத்திற்கு பின் எனது அப்பா பேசமுடியாத சூழ்நிலையில் உள்ளார். அவருக்கு தற்போது வரை சிகிச்சை பெற்று வருகிறார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் போன் மூலம் தகவல் கேள்விப்பட்டு தான் சம்பவம் இடம் சென்றேன். எனக்கு விபத்தை ஏற்படுத்திய வாகனம் மற்றும் விபத்து ஏற்படுத்திய நபர் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் விபத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.02 18:01:28 +0530

Judicial Magistrate No.I

Dindigul.